சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 23.03.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **82/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-6 |
| சாட்சியின் பெயர் | : | குணசேகரன் |
| தந்தை பெயர் | : | பொன்னுசாமி |
| கிராமம் | : | கரூர் |
| தாலுக்கா | : | கரூர் |
| தொழில் | : | காவல் துணை கண்காணிப்பாளர் (ஓய்வு) |
| வயது | : | 65 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

6-ம் எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் திருச்சி மாவட்ட குற்றப்பிரிவு துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் திருவாரூர் மாவட்டத்தில் நில அபகரிப்பு தடுப்புப் பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக 2017-ம் ஆண்டு பணியில் இருந்த போது மன்னார்குடி உட்கோட்ட துணை கண்காணிப்பாளர் விடுப்பில் சென்றதால் கூடுதலாக மன்னார்குடி உட்கோட்ட காவல்துணை காண்காணிப்பாளர் பொருப்பை ஏற்றுக்கொண்டேன். தலையாமங்கலம் காவல்நிலையத்தில் கடந்த 01.01.2017-ம் தேதியன்று உதவி ஆய்வாளர் ரஜேந்திரன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலினை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த முருகையன் மகன் மோகன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுள்ளார். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர், நிலையம் வந்து நிலைய குற்ற எண்.01/2017, ச/பி. 147, 148, 294(பி), 352, 323, 324, 506(2) இதச உ/இ 3 (1) (r) , 3(1) (s), 3(2)(va) SC & ST (PoA) Act ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் அப்பொழுது மன்னார்குடி துணை காவல் கண்காணிப்பாளராக இருந்த திரு. ரவிச்சந்திரன் என்பவரை இவ்வழக்கின் புலன் விசாரணை செய்ய வேண்டுமென செயல்முறை ஆணையான C.No.01/SJ&HR/TVR/2017 Dated 01.01.2017 ம் தேதி மூலம் உத்தரவிட்டுள்ளார். அந்த செயல்முறை ஆணை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதனை தொடர்ந்து மேற்படி காவல் துணை கண்காணிப்பாளர் திரு. ரவிச்சந்திரன் என்பவர் சாட்சிகள் மோகன், அ.சா.1 பார்த்திபன், அ.சா.2 சுந்தர், அ.சா.3 கவிதா, அ.சா.4 ராஜராஜன், அ.சா.5 பாலாஜி,

ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். மேலும், 01.01.2017-ம் தேதியன்று தென்பாதி பேருந்து நிலையத்தில் வெளியூர் செல்ல தயாராக இருந்த 1-ம் எதிரி குமரவேல், 2-ம் எதிரி வெங்கடேஷ், 4-ம் எதிரி ராஜ், 5-ம் எதிரி தமிழரசன், 6-ம் எதிரி விக்னேஷ், 7-ம் எதிரி துரையரசன் ஆகியோர்களை கைது செய்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேலும், நிகழ்நிலை புகார்தாரான மோகன் என்பவரை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி ஆஜர்படுத்தப்பட்டு ஒப்புதல் வாக்குமூலம் பெற்று வந்தேன்.

பின்னர் அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகளான ரவி மற்றும் பாஸ்கர் ஆகியோர்கள்முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், மேற்படி காவல்துணை கண்காணிப்பாளர் உடல்நலம் சரியில்லாமல் இருந்த காரணத்தினால் விடுப்பில் சென்றார் இதனை தொடர்ந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கடந்த 07.02.2017 செயல்முறை ஆணையான C.No.01A/SJ&HR/TVR/2017 Dated 07.02.2017 மூலம் இவ்வழக்கினை நான் விசாரணை செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார். அந்த செயல்முறை ஆணை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர், நான் இவ்வழக்கினை 07.02.2017-ம் தேதி புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா.1 பார்த்திபன், அ.சா.2 சுந்தர், அ.சா.3 கவிதா, அ.சா.4 ராஜராஜன், அ.சா.5 பாலாஜி மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் ரவி, பாஸ்கர் ஆகியோர்களை விசாரிக்கும்போது காவல் துணை கண்காணிப்பாளர் திரு. ரவிச்சந்திரன் என்பவரிடம் சொன்னதையே என்னிடம் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. இச்சம்பவத்தில் காயம்பட்ட நபரான அ.சா.1 பார்த்திபன், அ.சா.2 சுந்தர், அ.சா.3 கவிதா, அ.சா.4 ராஜராஜன்,

அ.சா.5 பாலாஜி ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் கீர்த்திவாசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடுகளை பெற்று வந்தேன். அந்த விபத்து பதிவேடுகள் **அ.சா.ஆ.8 முதல் அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும், இந்த வழக்கில் சாட்சி மற்றும் எதிரிகளுக்கு சாதி சான்றிதழ் வழங்க வேண்டி மன்னார்குடி வட்டாட்சியர் மலர்கொடி என்பவருக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி முருகானந்தம் மகன் மோகன் (இறப்பு), அ.சா.1 பார்த்திபன், அ.சா.2 சுந்தர், அ.சா.3 கவிதா, அ.சா.4 ராஜராஜன், அ.சா.5 பாலாஜி ஆகியோர்கள் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தர்கள் என சாதி சான்றிதழ் பெற்று வந்தேன். மேற்படி சாதிசான்றிழ்கள் **அ.சா.ஆ.13 முதல் அ.சா.ஆ.18** வரை குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் தெய்வநாயகி மற்றும் வட்டாட்சியர் மலர்கொடி ஆகியோர்களிடம் சாதி சான்றிதழ் பெற்று வந்தேன். 1-ம் எதிரி குமரவேல், 2-ம் எதிரி வெங்கடேசன், 3-ம் எதிரி செந்தில், 4-ம் எதிரி ராஜ், 5-ம் எதிரி தமிழரசன், 6-ம் எதிரி விக்னேஷ், 7-ம் எதிரி துரையரசன் ஆகியோர்களள் இந்து கள்ளர் வகுப்பை சேர்ந்தவர்கள் என சாதி சான்றிதழ்கள் பெற்று வந்தேன். மேற்படி சாதி சான்றிதழ்கள் ஜெராக்ஸ் நகல்கள் **அ.சா.ஆ.19 முதல் அ.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும், காவல் உதவி ஆய்வாளர் ராஜேந்திரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று வந்தேன். என்னுடைய விசாரணையில் அ.சா.1 பார்த்திபன், அ.சா.2 சுந்தர், அ.சா.3 கவிதா, அ.சா.4 ராஜராஜன், அ.சா.5 பாலாஜி ஆகியோர்கள் எனது விசாரணையில் நடந்த விபரங்கள் சொன்னார்கள். இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது கடந்த 31.03.2017-ம் தேதி குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் சொன்ன நாள் நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர புலன்விசாரணை

செய்யாமல் எதிரி மீது தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைடம் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.23 18:35:18 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.